**ஐக்கிய மதங்களின் ஒன்றியம் - United Religions Initiative**

1993 ல் கலிபோர்னியாவில் வாழ்ந்த எபிஸ்கோப்பல் பிசொப் அவர்களான விலியம் ஸ்விங் பிசொப் அவர்களுக்கு ஐக்கிய மதங்களின் ஒன்றியம் (United Religions Initiative) பற்றிய அடிப்படை கருத்து உருவாகியது. ஐக்கிய மக்கள் விஞ்ஞாபனம் கையெழுத்திடப்பட்டு 50 வருடங்கள் நிறைவடைந்த வேளையில் அதற்கான ஞாபகார்த்த வைபவமொன்று அமெரிக்காவின் சென்பென்சிஸ்கோ நகரில் நடைபெற்றதுடன், அதனையொட்டி பெருந்திரளான மதத்தலைவர்களின் பங்குபற்றலுடன் உலக சம்மேளனமொன்று ஒன்று கூட்டப்பட்டது. இதன் போது அவர்களது கருத்தானது, உலக அரசுகள் உலக சமாதானம் பற்றி கலந்துரையாடும் போது உலக மதங்கள் உலக சமாதானத்திற்காக என்ன செய்கின்றார்கள் என்பதாகும். இதன் பிரதிபலனாக URI அமைப்பு 2000 ஜுன் 26 ம் திகதி உலகம் முழுவதும் பரவலாக இருக்கும் பல்வேறு மதத்தவர்களின் ஒன்றியமாக ஆரம்பமானது.

## அறிமுகம் ( Preamble )

மத பல்லினத்துவத்திலும் ஆன்மீக பொருள் வெளியீடுகளிலும் சுதேச சம்பிரதாய முறைகள் மயமான உலகம் முழுவதும் பரவலான சமூகமாக ஒன்றாக ஒன்றிணைந்த நாம் மதங்களினால் ஏற்படும் வன்முறைகளை புறக்கணித்து புவியில் சமாதானம் நீதி நியாயம் மற்றும் அமைதியை அனைத்து உயிர்களுக்கும் நிலைநாட்டிக் கொள்வதற்காக ஐக்கிய மத ஒன்றியம் என்ற பெயரிலான அமைப்பை உருவாக்கிக் கொண்டோம்.

- நாம் அனைவரும் முறையான வழிபாடு மற்றும் நம்பிக்கைகளில் இருக்கும் வித்தியாசங்கள் மற்றும் அடையாளங்களை மதிக்கின்றோம்.
- மற்றவர்களின் மதிப்பிற்காக குரல் எழுப்புபவர்களைப் போலவே எமது பெறுமதியையும் ஞானத்தையும் பகிர்ந்தளித்துக் கொண்டு அனைவரினதும் நன்மைக்காக செயற்படுபவர்களை நாம் மதிக்கின்றோம்.
- மத மற்றும் ஆன்மீக வாழ்க்கை, எம்மை பிரித்து பிளவு படுத்துவதற்குப் பதிலாக ஒருவரையொருவர் மதிக்கக் கூடிய சமுதாயத்தை உருவாக்க இயலுமென நம்புகின்றோம்.
- ஆகையினால் எமது சம்பிரதாயங்களுக்குள் வேரூன்றிய சுயாதீன சமுதாயமாக உலக சமுதாயத்தின் நன்மைக்காக எமக்கு இப்பொழுது ஒன்றாக ஒன்றிணைய இயலும்.
- சமாதானத்தின் மற்றும் சட்டத்தின் கலாசாரத்தைக் கட்டியெழுப்புவதற்காக நாம் ஒன்றாக ஒன்றிணைவோம்.
- மோதல் மத்தியஸ்தத்திற்கு அமைதிக்கு மற்றும் புனரமைப்பிற்கு உகந்த பாதுகாப்பு மையமொன்றை ஒன்றிணைந்து கட்டியெழுப்புவோம்.
- சர்வதேச சட்டங்களுக்கு அனுகூலமாக தனிநபர் மற்றும் சமூகத்தின் மனித உரிமைகள் மற்றும் மத, ஆன்மீக நிலைபாட்டை வெளிப்படுத்துவதற்கு இருக்கும் சுதந்திரத்தை உறுதிபடுத்த உதவுவதற்கு நாம் ஒன்றாக ஒன்றிணைவோம்.

- உலகில் சமுதாயம் முகங்கொடுக்கும் பொருளாதார சுற்றாடல் அரசியல் மற்றும் சமூக சவால்களுக்காக எமது மத மற்றும் ஆன்மீக நிலை வெளிப்பாடு சம்பிரதாய பழக்கவழக்கங்களில் இருக்கின்ற மதிப்பு மற்றும் ஞானத்தைப் பயன்படுத்தி பொறுப்புடன் ஒருங்கிணைந்த செயற்பாடொன்றிற்காக நாம் ஒன்றாக ஒன்றிணைவோம்.

- அனைத்து மக்களுக்கும் பங்குபற்றக் கூடிய, விசேஷமாக அனுதினமும் கேட்காத குரல்களுக்காக உலகளாவிய வாய்ப்புகளை ஏற்படுத்திக் கொடுக்க நாம் ஒன்றாக ஒன்றிணைவோம்.

- நிலையான மற்றும் மாற்றம் பெறும் சுபாவத்திற்குள் ஞானத்தின் ஒளி மற்றும் ஆசீர்வாதத்தின் மகிழ்ச்சியை நினைவு கூறுவதற்கு நாம் ஒன்றாக ஒன்றிணைவோம்.

- உலக மக்களிடையே அன்பும் மற்றும் நியாயமும் ஏற்படுவதற்கு அஹிம்சை ரீதியிலான கருணைமிகு செயற்பாடுகளை ஈடுபடுத்திக் கொண்டு ஆழமான உண்மைகளை விழித்தெழச் செய்வதற்காக எமது வளங்களை திரட்டிக் கொண்டு பயன்படுத்தவதற்கு நாம் ஒன்றாக ஒன்றிணைவோம்.

## குறிக்கோள் ( Purpose )

ஐக்கிய மதங்களின் ஒன்றியத்தின் குறிக்கோளாவது, நிலையாக அன்றாடம் மதங்களுக்கிடையிலான தொடர்புகளை விருத்தி செய்வதன் மூலம் மதப் பிரகாசம் உருவாகுவதனால் ஏற்படுகின்ற மோதல்களை முடிவுறச் செய்து, புவியில் சமாதானம் நீதி நியாயம் மற்றும் நலம் பெற்ற கலாசாரமொன்றை சகல உயிரினத்திற்காகவும் உருவாக்குவதாகும்.

## மூலதர்மம் ( principles )

01. ஐக்கிய மதங்களின் ஒன்றியம் :URI) ஒரு மதமல்ல என்பதுடன் அது தொடர்புகளை விருத்தி செய்யும் ஒரு அமைப்பாகும்.

02. ஒவ்வொரு மதங்களிலும், ஆன்மீக நிலை வெளியீடுகளுக்கு மற்றும் சுயதேச வழிமுறைகளின் வணக்கத்திற்குரிய ஞானத்தார்களை நாம் மதிக்கின்றோம்.

03. அந்தந்த மதங்களிலும், ஆன்மீக நிலை வெளியீடுகளுக்கு மற்றும் சுயதேச வழிமுறைகளிலுள்ள பல்லினத்துவத்தை நாம் மதிக்கின்றோம்.

04. நாம் ஒவ்வொருவரினதும் சம்பிரதாயங்களுக்குள் ஆழமாக வேரூன்றிக் கொள்வதற்கு ஊக்கமளிக்கின்றோம்.

05. ஆழமான புரிந்துணர்வுடனும் நம்பிக்கையுடனும் நாம் மற்றவருக்கு செவி கொடுப்போம். பேசுவோம்.

06. நாம் விருந்தோம்பல் அளிப்பதற்கும், பெறுவதற்கும் நடவடிக்கையை மேற்கொள்வோம்.

07. மாற்றங்களுக்கு ஆளாவதை விடுத்து பல்லினத்துவம் மற்றும் புதிய பரிசீலனைகளுக்கான அவசியங்களை பெற்றுக் கொள்வதற்கு நாம் முயற்சி செய்வோம்.

08. நாம் இஸஜ செயற்பாடுகளில் ஆண்பெண் சமத்துவத்தை பேணுகின்றோம்.

09. நாம் வன்முறைகளின்றி மோதல்களை நிவர்த்தி செய்து கொள்வதற்கு மீளமைப்பு மற்றும் அமைதியை பயன்படுத்துவோம்.

10. நிகழ்கால மற்றும் எதிர்கால சந்ததியினரின் உளச் சுகத்திற்காக சுற்றாடல் பாதுகாப்பை ஏற்படுத்துவதற்கும் பாதுகாப்பதற்கும் நாம் நடவடிக்கைகளை மேற்கொள்வோம்.

11. நாம் ஏனைய மதங்களுக்கிடையிலான முயற்சிகளையும் ஆராய்ந்து பார்த்து ஒத்துழைப்பு வழங்குவோம்.

12. நாம் எமது நோக்கம் , கொள்கைகள் மற்றும் மூலதர்மங்களை ஏற்றுக் கொள்ளும் அமைப்புகள் மற்றும் நபர்களை இஸஜ அங்கத்துவத்திற்கு ஏற்றுக் கொள்வோம்.

13. பிரதேச மட்டத்தில் விபத்துகளுக்கு ஆளான பாலாருக்கு மற்றும் உரிய பாலார் தொடர்பாக தீர்மானம் மேற்கொள்வதற்கு இருக்கும் உரிமையை உறுதிபடுத்துவோம்.

14. இஸஜ நோக்கம் , கொள்கைகள் மற்றும் மூலதர்மங்களுக்கு அனுகூலமாக யாராவது அல்லது அத் தராதரத்திற்கு, அவ்வாறான செயற்பாட்டைச் செய்வதற்கான உரிமையை உறுதிபடுத்துவோம்.

15. எமது அனைத்து கலந்துரையாடல் மற்றும் பேச்சு வார்த்தைகள் அனைத்து பாலார் மற்றும் பல்வகைத்துவத்துடன் சர்வ சாதாரணமாக செய்யப்படுவதுடன், அதன் மூலம் எந்தவொருவரும் உயர்வு தாழ்விற்கு ஆளாக மாட்டார்கள்.

16. இஸஜ ன் சகல பகுதியும் சுய நிர்வகிப்பு மற்றும் வள பாவனைக்காக ஈடுபடுத்தப்படுவது எமது நோக்கம், கொள்கைகள் மற்றும் மூலதர்மங்களுக்கு உரித்தான வகையினருக்கு மாத்திரமேயாகும்.

17. நாம் எமது வகிபங்குக்கு தேவையான நிதி மற்றும் ஏனைய வளங்களை விருத்தி செய்து கொள்வதற்கு நடவடிக்கைகளை மேற்கொள்வதுடன், ஏனைய பாலாரின் தேவைகளுக்கும் அவ் வசதியை பூர்த்தி செய்து கொள்வதற்கு உதவ வேண்டும்.

18. வளங்களை மிகவும் சிக்கனமாக உபயோகிப்பதற்கும், சாதாரணமானதும் மற்றும் உண்மையானதுமான தகவல்களை நேர்மையாகவும் பண்பாட்டுடனும் நாம் மிக உயர்ந்த நிலையில் நடாத்திச் செல்ல வேண்டும்.

19. அமைப்பு தொடர்பாக விழிப்புணர்ச்சி பெறவும், அவற்றைப் பயன்படுத்தவும் நாம் அர்ப்பணிக்கின்றோம்.

20. நாம் அனைத்து மொழிகளிலும் இருக்கும் மேன்மை பற்றி மற்றும் பல்லினத்துவத்திற்கு மதிப்பளிப்பதுடன் பங்குபற்றுபவர்களின் உரிமையெனவும் பொறுப்பெனவும் கருதி இஸஜ விஞ்ஞாபனம், யாப்புச் சட்டம், மேலதிக சட்டமூலம் மற்றும் அதற்கான ஏனைய ஆவணங்களான ஆரம்பம், நோக்கம், மற்றும் மூலதர்மம் போன்றவற்றை ஏனைய மொழிகளுக்கு மொழி பெயர்ப்பு செய்ய வேண்டும்.

21. ඉඎෂ அங்கத்தவர்கள் எந்த விதத்திலும் யாக ஹோமங்கள் அல்லது வேறு மதங்களுக்கு பலாத்காரமாக மாற்றுவதை வன்மையாக கண்டிக்கின்றது.

**விசாரணை (Inquiries )**


United Religion Initiative
Shanthi Sena
No 72/ 5, Rawathawatatta Road,
Moratuwa - Sri Lanka
0112655049 / 0777636302
561 2313
sarvoshanthi@sltnet.lk

United Religion Initiative
CC P.O.Box 29242
San Francisco, CA 94129
U.S.A
001 415 561 2300 / 001 415
office@uri.rg

# Get Started

## URI ஒத்துழைப்பு சுற்றொன்றை ஆரம்பித்தல் - ஆரம்ப படிமுறைகள்

## 01. மக்களை ஒன்று திரட்டிக் கொள்ளல் (Gather People Together )

URI ஒத்துழைப்பு சுற்றொன்றை ஆரம்பிப்பதற்கு குறைந்த பட்சம் ஏழு பேரை தொடர்புபடுத்திக் கொள்ள வேண்டும். ஒத்துழைப்பு சுற்று பல்வேறு பல்லினத்துவத்தை வரவேற்கின்றது. இதன் போது அங்கத்துவம் குறைந்த பட்சம் மத வழிபாடு அல்லது சுதேச வழக்கங்களைக் கடைப்பிடிக்கும் குழுக்களில் குறைந்த பட்சம் மூன்று பேராவது பிரதிநிதித்துவப்படுத்த வேண்டும். சங்கம் அல்லது அமைப்பு ரீதியிலும் இதில் அங்கத்துவத்தைப் பெற்றுக் கொள்ளலாம். நீங்கள் அழைப்பு விடுக்க வேண்டியது யாருக்கு? ஆரம்பிக்கும் சந்தர்ப்பத்தில் நீங்கள் அறிந்த அறிமுகமானவர்களுக்கு அறிவிக்கவும். அதன் பின்னர் மேற்குறிப்பிடப்பட்டுள்ள மத குழுக்களுக்கு அழைப்பு விடுக்கவும்.

ஒத்துழைப்பு சுற்றொன்றை ஆரம்பிப்பதனால் ஏதேனும் பெறுபேறு கிடைக்கக் கூடுமென நீங்கள் நினைக்கும் ஏனைய குழுவின் அங்கத்தவர்களுக்கும் அழைப்பு விடுக்கவும். URI மூலமாக அவர்களுக்கு பிரயோசனத்தைப் பெற்றுக் கொள்ள இயலுவதைப் போலவே அவர்களுக்கு URI க்காக செய்யக் கூடிய சேவைகளைப் பற்றி அவர்கள் புரிந்து கொள்வதற்கு அவர்களை ஊக்கப்படுத்தவும்.

## 02.ஆரம்பம், நோக்கம், மற்றும் மூலதர்மம் பற்றிய விழிப்புணர்வு (Reflect on the preamble, purpose and Principles)

பங்குபற்றும் குழுக்களுக்கு ஆரம்பம், நோக்கம், மற்றும் மூலதர்மம் பற்றி நன்கு வாசிப்பதற்கான சந்தர்ப்பத்தை வழங்கவும். ஒவ்வொரு அங்கத்தவருக்கும் ஒரு பந்தி வீதம் வாசிக்கச் செய்யுங்கள். இதன் படி கலந்து கொள்ளும் அனைவரையும் தொடர்பு படுத்திக் கொள்ள வேண்டும். இங்கு அடங்கியிருக்கும் சொற்களின் எழுச்சி, முக்கியத்துவம் மற்றும் சவால்கள் பற்றி புரிந்துணர்வதற்கான சந்தர்ப்பத்தை வழங்கவும். இச் சொற்களில் வெளிபடுத்தப்படும் பெறுமதியின் ஒரு பகுதியை உமது வாழ்க்கைக்கு ஏதேனும் சந்தர்ப்பத்தில் ஏதேனும் தாக்கத்தைத் ஏற்படுத்தியதா? என்பது பற்றி சிந்திக்கச் செய்யுங்கள். இக் கொள்கைகளை எந்தளவிற்கு உங்களது குழுக்களுக்கு தொடர்புபடுத்திக் கொள்ளலாம்?

## 03. ஒவ்வொருவரினதும் பெறுமதி மற்றும் திறமைகளை மதிப்பிடல் ( Appreciate One Another’s and Values )

ஒருவரையொருவர் அறிமுகமாவதை தொடங்கவும். பங்குபற்றுபவரின் எதிர்பார்ப்பு, பெறுமதி, அனுபவங்கள் மற்றும் திறமைகள், மதிப்பிட்டு நேர்முக கலந்துரையாடல் ரீதியில் அறிமுகத்தை செய்யவும்.

துியானத்தின் மூலம் அல்லது மத வழிபாட்டிற்குப் பின் முறையான செயற்பாடான மதிப்பிட்டு கலந்துரையாடலை ஆரம்பிக்கலாம்.

## 04. மதிப்பீட்டிற்குள்ளாக்கும் நேர்முக கலந்துரையாடல் ( Appreciative Interview )

பங்குபற்றுனர்களை சோடிகளாக பிரிக்கவும். அச் சோடிகளுக்கிடையில் கீழ்க் காணும் விதத்தில் மதிப்பீட்டிற்கு ஆளாக்கும் கலந்துரையாடலைச் செய்வதற்கு வாய்ப்பளிக்கவும்.

### 1. மதங்களுக்கிடையிலான சந்திப்புகள் மூலம் கிடைத்த ஞானம் ( Insights from important interfaith encounters )

உலகில் சிறியதென்றாலும் ஏனைய மதங்கள் அல்லது ஆன்மீக முறைகளில் வரும் சமூகத்துடன் எமக்கு பெரும்பாலான அனுபவத்தைப் பெற்றுக் கொள்வதற்கு அதிக வாய்ப்புகள் கிட்டுகின்றன. மதங்களுக்கிடையிலான சந்திப்புகளின் போது நடைபெற்ற விசேடமாக மிகவும் முக்கியமானதும் பெறுபேறு மிக்கதுமான பணிவுடைமை மற்றும் ஆச்சரியமடையக் கூடிய அவ்வாறான சந்தர்ப்பங்களின் மூலம் போலித்தனமற்ற நட்பை உறுதிபடுத்திக் கொள்வதற்கு இயன்றமை தொடர்பான பேச்சுகளை உங்களுக்கு பகிர்ந்து கொள்ள இயலுமா?

### 2. ஒத்துழைப்புடன் வேலை செய்த சந்தர்ப்பத்தின் அனுபவங்கள்(Experience with cooperative action )

நாம் அநேகமான சந்தர்ப்பங்களில் எமது எதிர்பார்ப்பான மேலும் சிறந்த உலகொன்றை உருவாக்குவதற்கு மற்றவர்களுடன் இணைந்து நடவடிக்கைகளை மேற்கொண்ட சந்தர்ப்பங்கள் இருக்கின்றன. உமது வாழ்க்கையில் நீர் தொடர்பு கொண்ட அவ்வாறான உன்னதமான சந்தர்ப்பத்தை ஞாபகப்படுத்திக் கொள்ளவும். மேலும் சிறந்த உலகம் ஒன்றை உருவாக்குவதற்கு அது எவ்வாறு உறுதுணையாகும். அவ்வாறான அனுவங்களைக் கொண்ட கதையொன்றை மற்றவர்களுடன் பகிர்ந்து கொள்ளவும்.

### 3. மேலும் சிறந்த உலகம் ஒன்றிற்கான கற்பனைக் காட்சி ( Vision of a better world )

எதிர் வரும் 30 வருடங்களுக்கு உமது மனதை எடுத்துச் செல்லவும். அதன் போது நீர் எதிர்பார்க்கும் உலகம் எவ்வாறானதாக வேண்டுமென்பதைச் சிந்திக்கவும். உமது எதிர்பார்ப்பு நினைவலைகளுக்கு அனுகூலமாக அவ் உலகம் கட்டியெழுப்பப்படும் விதம் பற்றி சிந்தனையிற் கொள்ளவும். அவ்வுலகம் அச் சந்தர்ப்பத்தில் உமக்கு எவ்வாறு காட்சியளிக்கும்.

### 4. மதங்களுக்கிடையிலான ஒத்துழைப்பு ( Interfaith Cooperation )

மதங்களுக்கிடையிலான ஒத்துழைப்பு மூலமாக மேலும் சிறந்த உலகொன்றை உருவாக்கிக் கொள்ள இயலுவது எவ்வாறு என்பதை மனதில் கற்பனை செய்து கொள்ளவும். பல்வேறு மத வழிபாடு நம்பிக்கைகள் இருப்பவர்கள் ஒன்றாக இணைந்து வேலை செய்வதன் மூலம் ஏற்படும் நிலைமை பற்றி சிந்தனையில் கொள்ளவும். உமது செயற்பாடுகளின் மூலம் இவ்வாறானவர்கள் உலகம் முழுவதும் வலையமைப்பாவதனால் அது பலசக்தியாகி உலகிற்கு ஏற்படும் நன்மை பற்றியும் சிந்திக்கவும். உமது செயற்பாடுகளின் மூலம் இவ்வாறான நிலைமையை நிலைநாட்டிக் கொள்ள இயலுமா?.